# சிவத்தம்பி மார்க்சியவாதி அல்லர்; மார்க்சிய ஆய்வாளர்.

கே.ரீ. கணேசலிங்கம்

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் நினைவுகளை மீட்கும் வாய்ப்பு மீள ஒரு தடவை கிடைத்துள்ளது. அவர் அமரத்துவம் அடைந்த நாட்களில் சில மேடைகளிலும் 'இலங்கை ரூபவாஹினி' கூட்டுத்தாபனத்தின் அஞ்சலி நிகழ்விலும் கலந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வாறே அவரது நினைவுகளைப் பதிவு செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தினை மிக உயர்வாகக் கருதுகிறேன். பேராசிரியரின் நினைவுகளை ஒரு மாணவனாக, சக விரிவுரை யாளனாக, நண்பனாகப் பார்க்க முயலுகின்றேன்.

பேராசிரியரின் பிறப்புப் பற்றிய செய்தியுடன் அவரது நினைவு களைப் பதிவு செய்ய முயலுகின்றேன். அவரது பிறப்புக்கும் பெயருக்கும் தனித்துவமான அங்கீகாரம் கிடைத்துள்ளதென்றே நாம் எப்போதும் கருதுவதுண்டு

## 1

பேராசிரியரின் பிறப்புப் பற்றிய செய்தியுடன் அவரது நினைவு களைப் பதிவு செய்ய முயலுகின்றேன். அவரது பிறப்புக்கும் பெயருக்கும் தனித்துவமான அங்கீகாரம் கிடைத்துள்ளதென்றே நாம் எப்போதும் கருதுவதுண்டு. செல்லப்பா சுவாமிகளின் சீடரான சிவயோக சுவாமிகள் ஈழத்துச் சித்தர்களின் வரிசையில் மிகவும் சிறப்பாகப் பேசப்படுபவர். அவரை வழிபடும் மரபு ஈழத்தில் இன்றும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் செல்லும் எவரும் சுவாமிகளைத் தெரிந்துகொள்ளாமல் இருக்க முடியாது. அத்தகைய மரபு வழியில் பேராசிரியரின் தந்தையாராகிய கார்த்திகேசுவும் சிவயோக சுவாமிகளைத் தரிசிப்பது வழமை. அவ்வாறு ஒரு தடவை சுவாமிகளைப் பேராசிரியரின் தந்தையார் தரிசிப்பதற்காகச் சென்றிருந்த வேளையில், சிவயோக சுவாமிகள் கார்த்திகேசுவை பார்த்து "உனக்குச் சிவத்தம்பி பிறந்திருக்கிறான் போய்ப் பார்" என்றார். மகிழ்ச்சியடைந்த பேராசிரியரின் தந்தையார் சிவயோக சுவாமிகளின் வாய்வழி வந்த பெயரான 'சிவத்தம்பி' எனும் நாமத்தைப் பேராசிரியருக்குச் சூட்டியதாக அவரது துறைசார்ந்த பேராசிரியர் சிவலிங்கராசா, பேராசிரியரின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் தெரிவித்தார். ஈழத்துப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி வெளிவந்துள்ளது.

பேராசிரியரின் பிறப்பிற்குச் சிவயோக சுவாமிகளின் ஆசிர்வாதம் கிடைத்துள்ளதென்பதை விளங்கிக்கொள்ளும் பண்பாடு நம்மவரிடையே உண்டு. பேராசிரியரும் பிறப்பிலிருந்து அமரத்துவம் அடையும் வரை அதனைக் கடைப்பிடித்துள்ளார் என்றே கருதமுடியும். காரணம் அவரால், ஆசிர்வாதம் அளிக்கப்படும் எந்த மாணவனும், அவனது எந்தச் செயலும் தோற்றுப்போனதாக சரித்திரத்தில் நாம் அறியவில்லை. பேராசிரியரது எண்ணத்தில் வியாபித்திருக்கும் ஆத்மபலம் அதன்மீதான ஈர்ப்புத் தன்மை, வசீகரம், மனதில் நிலவும் நிறைவு என்பன சந்திக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் பூரணத்துவத்தைக் கொடுக்கும்.

பேராசிரியரின் மனம் அவரது உடல்போல் விசாலமானது. அவரது உள்மனம் எப்போதும் எதையும் நேசித்துக்கொண்டேயிருக்கும். பேராசிரியருக்கு முன்னே காட்சிப்படும் எந்த வகை மாணவனையும் கனதியாக்கும் திறன் அவருக்கே உரியது. எல்லோரையும் அங்கீகரிக்கின்ற மனப்பக்குவம் பேராசிரியருக்கே உரிய தனித்தன்மை எனது நூல் ஒன்றைக் கொழும்பில் இயங்கும் தமிழ்ச் சங்கத்தில் வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதைய சூழலில் யாழ்ப்பாணத்திலிருந்து நான் கொழும்பு வரமுடியாத நிலை. எனது சக நூலாசிரியர் மட்டுமே வெளியீட்டுக்குப் பிரசன்னமாயிருந்தார். அந்த நூல் வெளியீட்டுக்குப் (2006) பேராசிரியரே தலைமை தாங்கியிருந்தார். அவருக்கு முன்னே நான் மிக இளைய (சிறிய) ஆய்வாளன். ஆனால் அவர் அந்த நூல் வெளியீட்டில் என்னைப்பற்றி வெளிப்படுத்திய அறிமுகக் குறிப்பில் என்னை ஒரு பெரும் ஆய்வாளனாகவும் கொள்கை சார்ந்த ஆய்வாளனாகவும் சுட்டிக் காட்டியதுடன், எனது ஆய்வுப் பரப்பில் உலகுக்குத் தெரியப் படுத்தப்பட வேண்டிய விடயங்கள் ஏராளமாக உள்ளன என்றும் தெரிவித்திருந்தார். பேராசிரியரின் கருத்துக்கள் எனது ஆய்வுப் புலத்திற்கு வலுச்சேர்த்ததுடன் என்னை மேலும் ஆய்வுகளை மேற்கொள்ளத் தூண்டின. அவர் அமரராவதற்கு ஏறக்குறைய இரு மாதங்களுக்கு முன்னர் நானும் எனது சக நண்பர்களான திரு மோஸஸ், திரு இராஜேஸ்கண்ணா ஆகிய மூவரும் அவரது தெகிவளை வீட்டில் சந்தித்தோம். எனது குரலை வைத்து உடனடியாகக் கண்டுகொள்ளும் வல்லமை அப்போதும் பேராசிரியருக்கு இருந்தது. அவரைச் சுற்றி மூவரும் அமர்ந்து விட்டோம். செம்மொழி பற்றிய 'உசாவல்' (இது அவரது சொல்) நிகழ்கிறது. திருவள்ளுவர், ஔவையார், தொல்காப்பியர் ஆகியோரின் இலக்கண, இலக்கியக் கருத்துக்களும் அவரது ஆசிரியர் ஜார்ஜ் தொம்சன் அவர்களின் ஆய்வு முடிவுகளும் அப்போது பேராசிரியரின் உரையாடலை வலுப்படுத்தின. ஒன்றரை மணித்தியாலம் ஒரு வகுப்பு நடந்து முடிந்ததுபோல் இருந்தது. அவரது அசைவுக் கதிரையில் அப்படியே அமர்ந்திருந்தார். உரையாடல் முடிந்த பிற்பாடு

பேராசிரியரின் மனம் அவரது உடல்போல் விசாலமானது. அவரது உள்மனம் எப்போதும் எதையும் நேசித்துக்கொண்டேயிருக்கும். பேராசிரியருக்கு முன்னே காட்சிப்படும் எந்த வகை மாணவனையும் கனதியாக்கும் திறன் அவருக்கே உரியது

பேராசிரியர் தான் தனது காலைச் சற்று அசைத்தார். அவரது கால்களிலிருந்து இரத்தம் ஓடியதை அப்போதுதான் கண்டோம். பேராசிரியர் அசைவின்றி, வலியின்றி அப்படியே உரையாடிக் கொண்டிருந்தார்.

இன்னொரு சம்பவம் எனது நினைவில் மறக்க முடியாதது. 2007ஆம் ஆண்டு அவரது பிறந்த தினத்தன்று வாழ்த்துச் சொல்வதற்குத் தொலைபேசிவழி தொடர்பு கொண்டேன். இரவு எட்டுமணி இருக்கும். ஒரு சில வரிகளில் எனது வாழ்த்து முடிந்தது. பேராசிரியர் மகிழ்ச்சி மேலிட்டு சிரித்தபடி சொன்னார் "தம்பி கேரி. நீ வாழ்த்தினால் நான் நூறு வருடம் வாழ்வேனடா." அந்தச் சொற்கள் எனக்கு பிரமிப்பாக இருந்தன. ஏன் அப்படி நூறு வருடம் பேராசிரியர் வாழவில்லை என்பது வேதனையாக இருக்கிறது. பேராசியரின் சொற்களுக்கு அர்த்தங்கள் ஆயிரம் அவரது உணர்வையும் உள்ளத்தையும் அறிவால் மனித நேயத்தை அளந்த விதத்தையும் வாழ்வில் நான் வேறு யாரிடமும் காணவில்லை.

அவரை ஒரு மார்க்சிய வாதியாக அடையாளப் படுத்துவதை விடுத்து, நல்லதொரு மார்க்சிய ஆய்வாளனாக இனங்காண்பது பொருத்தப்பாடுடையது. காரணம், மார்க்சிய அரசியல் கண்ணோட்டத்துடன் நிகழும் ஆய்வரங்குகளில் எழும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துவைக்கும் அவரது வல்லமை தனித்துவமானது

2

பேராசிரியர் சிவத்தம்பியின் ஆய்வுப் புலத்தைத் துறைசார்ந்தும் அதனைக் கடந்தும் மதிப்பீடு செய்யலாம். ஆனால் அதற்கு ஒருபடி மேல்சென்று அவரைப் பல்துறை நிபுணராகவும், புலமைசார் துறைகளுக்கிடையிலான தொடர்பாளனாகவும் இனங்கண்டு கொள்ளமுடியும். மேலும், பேராசிரியரின் ஆய்வுத் தளத்தில் மார்க்சியம் மூலாதாரமாக அமைந்திருக்கும். மார்க்சிய முறையியலில் நிபுணத்துவம் மிக்க ஆய்வாளர் வரிசையில் தனித்துவமிக்கவர். அவரது ஆய்வு களுக்குள் வரலாற்றுப் பொருள்முதல் வாதமும் இயங்கியல் பொருள்முதல் வாதமும் பிரதான செல்நெறிகளாக விளங்கும். அவரது இனவரைவியல் யாழ்ப்பாணச் சமூகம், சங்க இலக்கியம், சமகால அரசியல், இலங்கை அரசியல் தொடர்பான எல்லா எழுத்துகளிலும் மார்க்சியம் உயிரோட்டமாக இருக்கும். பேராசிரியரின் உரையாடலும் எழுத்துக்களும், விரிவுரைகளும் மார்க்சியத்தைக் கருவாகக்கொண்டே அமைந்திருக்கும். அவரை ஒரு மார்க்சிய வாதியாக அடையாளப் படுத்துவதை விடுத்து, நல்லதொரு மார்க்சிய ஆய்வாளனாக இனங்காண்பது பொருத்தப்பாடுடையது. காரணம், மார்க்சிய அரசியல் கண்ணோட்டத்துடன் நிகழும் ஆய்வரங்குகளில் எழும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துவைக்கும் அவரது வல்லமை தனித்துவமானது. அவர் ஆய்வரங்குகளில் உரையாற்றும்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 'கைலாசபதி கலையரங்கம்' நிரம்பி வழியும். 1989இல் "சோவியத் யூனியனின் வீழ்ச்சி" பற்றிப் பேராசிரியர் கைலாசபதி கலையரங்கில் கருத்தரங்க உரை ஒன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தார். ஏறக்குறைய ஒன்றரை மணித்தியாலம் அவரது பேச்சு நிகழ்ந்தது. பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார், கல்விசாராப் பணியாளர்கள் ஆகியர்களால் நிரம்பிக் 'கைலாசபதி கலையரங்கம்'

மிடுக்குடன் காணப்பட்டது. வெளியே வரிசையில் நின்று அவரது உரையைக் கேட்டவர்கள் ஏராளம். பேராசிரியர், உரை முடியும்வரை கதிரையில் ஒருபோதும் அமரமாட்டார். கையில் ஒரு கைக்குட்டையை மட்டும் விரித்து வைத்துக்கொள்வார். அவரது கம்பீரமான நடையும், உடல் அசைவும், குரலின் ஓசையும், கனகச்சிதமான சொல்லாடலும் கேட்போரை பிரமிக்க வைக்கும். இடையிடையே ஆங்கிலச் சொற்களும், வசனங்களும் கணீரென ஒலிக்கும். இக்காட்சி அரங்கத்திலுள்ளோரை மெய்சிலிர்க்க வைக்கும்.

அவரது பத்தி எழுத்துகளில் காணப்படும் உயிரோட்டம் எதிர்பார்க்கையை ஏற்படுத்துவது மட்டுமன்றி, ஈழத்தமிழர் சார்பு நிலைக் கருத்துக்களை வெளிப்படுத்து வதாகவும் அமைந்துவிடும். இறுதிக் காலத்தில் படுக்கையிலிருந்து கொண்டே இவ்வகைப் படைப்புக்களை வெளியே கொண்டுவந்தார்

அறிவை அறிவால் வெற்றிகொள்ளும் முறையியல் பேராசிரியருக்கே தனித்துவமானது. ஒரு தடவை பேராசிரியர் வகுப்பறையில் ஈழத்தில் தற்கால இலக்கியம் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். அக்காலத்தில் எந்த மாணவனும் அறிவைப் பெறுவதற்காக எந்த வகுப்பறைக்குள்ளும் செல்ல முடியும். நான் அரசறிவியலைச் சிறப்புக் கலையாகக் கற்றாலும் பேராசிரியரது வகுப்பறைக்குச் செல்வது வழமையானது. அதுவும் அன்று கட்டுரை வகுப்பு. எங்கள் சகமாணவி ஒருவர் "ஈழத்தில் தற்கால இலக்கியம் தலைவிரித்தாடுகிறது" என எழுதிவிட்டார். பேராசிரியர் அந்த வரிகளை வாசித்தவுடன் எதேச்சையாக குறிப்பிட்ட மாணவியைப் பார்த்து "யாரம்மா சீப்புக் கொடுப்பது" என்று கேட்டுவிட்டார். கைலாசபதி கலையரங்கமே மூன்று, நான்கு நிமிடங்களாகப் பேராசிரியரும் நாங்களும் போட்ட சிரிப்பொலியால் கலகலத்தது. அன்று பேராசிரியர் மூன்று மணித்தியாலம் வகுப்பு நடத்தினார். அன்றைய வகுப்பறைபோல் என்றும் அவரது வகுப்பறையை விட்டு வெளியேறும் போது மாணவர்கள் மகிழ்ச்சியுடனும் எதிர்பார்க்கையுடனும் காணப்படுவார்கள். புதிய சிந்தனையுடனும் மாற்றத்துடனும் வகுப்பறையைவிட்டு வெளியேறுவோம்.

3

பேராசிரியரின் பத்திரிகை எழுத்துகள் மிகச் சுவையானவை. ஆரம்பகாலத்திலிருந்து பத்திரிகை எழுத்துகளுக்குள் நுழைந்தாலும் பிற்காலத்தில் 'தினக்குரல்' வாரமலரில் அவரது கட்டுரைகளைத் தொடர்ச்சியாகப் படிக்க முடிந்தது. அவரது பத்தி எழுத்துகளில் காணப்படும் உயிரோட்டம் எதிர்பார்க்கையை ஏற்படுத்துவது மட்டுமன்றி, ஈழத்தமிழர் சார்பு நிலைக் கருத்துக்களை வெளிப்படுத்து வதாகவும் அமைந்துவிடும். இறுதிக் காலத்தில் படுக்கையிலிருந்து கொண்டே இவ்வகைப் படைப்புக்களை வெளியே கொண்டுவந்தார். அவ்வகை நிலையிலேயே தொலைபேசி வழியாக வானொலிகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் பேட்டிகொடுப்பார். எழுத்துகளிலும் உரையாடல்களிலும் அவரது முறையியல் விசேடமானதாக அமையும். எப்போதும் தான் குறிப்பிடும் விடயத்தின் மூலத்தைக் கண்டு கொள்ளும் திறன் அவருடைய ஆளுமையில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய அம்சமாகும்.

ஒரு தடவை சூரியன் எஃப். எம். அலைவரிசையூடாக நானும் பேராசிரியரும் உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். அப்போது நேயர் ஒருவர் சிவில் சமூகம் (civil society) என்பதற்கு விளக்கம் கேட்டுவிட்டார். ஈழத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களும், அரசியல், சமூகவியல் புலமையாளர்களும் அதிகம் உச்சரிக்கும் சொற்பதமாக 'சிவில் சமூகம்' காணப்பட்டது. பேராசிரியரின் விளக்கம் நிலமானியச் சமூகத்திலிருந்து ஆரம்பித்து, தொழில் வளர்ச்சி பெற்ற நகரங்களை எல்லாம் அலங்கரித்து, இறுதியில் வளர்ந்த மேற்கு நாடுகளில் பிரயோகிக்கப்படும் சிவில் சமூகம் என்ற சொல்லை விடுத்து, இலங்கையராகிய நாம், 'ஒரு குடிசார் சமூகம்' என்று குறித்துரைத்தார். இது பேராசிரியருக்கே உரிய அடையாளம். எதைப் பற்றிய விபரணத்தைக் கேட்டாலும் அதன் மூலத்திலிருந்து விளங்கப் படுத்துவது அவரது இயல்பு. ஒரு வகையில் வரலாற்று, தொல்லியல் ஆதாரங்களைக் குறிப்பிடுவதுடன் அதனூடே எழுந்து வந்த மொழிசார் பண்பாட்டையும், பொருள்சார் கட்டமைப்பையும் விவரிப்பதில் கவனம் கொள்வார். அவர் தமிழ்மொழிப் பேராசிரியராக இருந்தாலும் அரசியல், சமூகவியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளுக்கும் அதிகமான பங்களிப்பைச் செய்துள்ளார். இவ்விடயம் அவரது மறைவுக்குப் பின் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தால் அதிகம் உணரப்படுகிறது. இக்காலச் சமூகம் அவரது எழுத்துகளைப் பல்புலமைசார் தளத்தில் ஆய்வுப் பொருளாக்குவது மட்டுமன்றி, அவரையும் அவரது ஆய்வு முறையியலையும்கூட ஆய்வுப் பொருளாகக் கொள்ள வேண்டும்.

வர் தமிழ்மொழிப் பேராசிரியராக இருந்தாலும் அரசியல், சமூகவியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளுக்கும் அதிகமான பங்களிப்பைச் செய்துள்ளார். இவ்விடயம் அவரது மறைவுக்குப் பின் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தால் அதிகம் உணரப்படுகிறது

## 4

பேராசிரியரது வாழ்வோடு இசைந்த இன்னுமோர் அம்சம் புலமையாளர்களுக்கே உரிய மிடுக்காகும். மகாகவி பாரதி குறிப்பிடுவது போல் வகுப்பறைகளிலும், மேடைகளிலும் நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, இயம்பும் வார்த்தைகளில் தெளிவு என்பன அவரோடு கூடப்பிறந்தது. எதற்கும் அஞ்சமாட்டார். யாரையும் இலகுவில் தன்னுடன் சேர்த்துக்கொள்வார். நான் அவரை 1987ஆம் ஆண்டு சந்திக்கும் போது, கையில் ஓர் ஊன்றுகோல் வைத்திருப்பார். அதனைச் சில வேளைகளில் நேராகப் பிடித்துக்கொண்டு நடந்து வருவார். சில சந்தர்ப்பங்களில் ஊன்றிக் கொண்டுவருவார். ஆனால் ஒரு சந்தர்ப்பத்திலும் நிமிர்ந்த நடை தளராது. அதன் அழகே தனி. அதனை நான் சகமாணவர்களோடு நின்று இரசித்த நாட்கள் அதிகம்.

பேராசிரியரைச் சுற்றி எப்போதும் புத்தகங்கள் குவிந்திருக்கும். அவர் எந்த வாகனத்தில் பயணம் செய்தாலும் ஒரு குறிப்பிட்ட நேரம் புத்தகங்களை இறக்குவதற்காக வாகனங்கள் தரித்துத்தான் ஆக வேண்டும். அவர் நூலகத்திற்குச் செல்லும் போது, மூன்று சக்கர வண்டியில் தான் இருக்க இடமில்லாமல் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு செல்வார். அவற்றைப் பல்கலைக்கழக நூலக வரவேற்பு

மேசையில் வரிசையாக அடுக்கியிருப்பார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள நூல்களில் அதிகமானவற்றினைப் படித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் பேராசிரியருடைய பெயரே காணப்படுமென கருதுகின்றேன். புத்தகங்களை அவர் வாரி அணைத்துக் கொண்டு செல்லும் காட்சியில், ஒரு குழந்தையைத் தாய் அணைத்துக்கொண்டு செல்லும் பிணைப்புத் தென்படும். ஒரு பேராசிரியன், ஆய்வாளன், அறிஞன், புலமையாளன் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு முன்னுதாரணமாகச் செயல்பட்டவர்.

நூல்களைப் பாதுகாப்பதும், சுத்தம் செய்வதும், படிக்கும்போது குறிப்பு எடுத்துக்கொள்வதும் அவரது இயல்புகளில் ஒன்று. வகுப்பறையில் புத்தகங்களை வாசிப்பது வேறு, படிப்பது வேறு என்று கூறுவார். புத்தகங்களை படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள் என்று அடிக்கடி கூறுவார். புத்தகங்களின் பக்கங்களை மடிப்பதையோ, பழுதுபடுத்துவதையோ விரும்பமாட்டார். நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளைப் போல் புத்தகங்களுக்கிடையே வெள்ளைத்தாள்களை இடையிடையே செருகி, அதில் குறிப்புப் போட்டுக்கொள்வார். அப்படியே புத்தகங்களை வகுப்பறைக்கு கொண்டுவருவார். நான்கு அல்லது ஐந்து புத்தகங்களை வகுப்பறைக்கு எடுத்துவரத் தவறமாட்டார். மாணவர்களின் வினாக்களுக்கு நூல்களை ஆதாரப்படுத்திப் பதில் அளிப்பார். அதனோடு அந்தப் புத்தகம் பற்றிய முழுச் சாராம்சமும் மாணவர்களுக்குக் கிடைத்துவிடும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள நூல்களில் அதிகமானவற்றினைப் படித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் பேராசிரியருடைய பெயரே காணப்படுமென கருதுகின்றேன்

பேராசிரியரின் இன்னோர் இயல்பினைக் குறிப்பிட்டு அவர் தொடர்பான நினைவுக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என்றுள்ளேன். 1994ஆம் ஆண்டு நான் அப்போது தற்காலிக விரிவுரையாளராக அரசறிவியல் துறையில் பணிபுரிகின்றேன். அன்று காலை எட்டுமணி முதல் எனக்கு விரிவுரைகள் இருந்ததனால் பதினொரு மணிக்குப் பிற்பாடு காலை ஆகாரத்தை அருந்துவதற்காக சிரேஸ்டப் பொது அறைக்கு வருகைதந்து கொண்டிருந்தேன். சிரேஸ்டப் பொது அறையின் இடப்பக்கம் கலைத்துறைப் பீடாதிபதி அலுவலகம். வலப்பக்கம் பேராசிரியர் தலைமை தாங்கும் துறையின் அலுவலகம். இப்பகுதியை அண்டிய பிரதேசத்தில் மாணவர்களும், விரிவுரையாளர்களும் பரபரப்பாகக் காணப்பட்டனர். நான் பேராசிரியரின் அலுவலகத்திற்கு முன்பாக வந்துவிட்டேன். பேராசிரியர் பீடாதிபதியை நோக்கி ஆங்கில மொழி வார்த்தைகளை எறிந்து கொண்டிருந்தார். அவரது குரலின் வெப்பம் அதீதமாக இருந்தது. ஆனால் பீடாதிபதி அலுவலகத்திற்குள்ளேயே இருக்கின்றார். பின்னர், பேராசிரியர் தனது அலுவலகத்திற்குள் நுழைந்துவிட்டார். அந்த இடைவேளையில் நான் நண்பர்களிடம் விசாரித்தறிந்ததில், பேராசிரியருடைய துறைக்குரிய நிருவாக நடவடிக்கையில் பீடாதிபதி சரிவர நடந்து கொள்ளாததை மாணவர்கள் பேராசிரியருக்குத்

தெரியப்படுத்தியதை மேலிட்டே பீடாதிபதியுடன் பேராசிரியர் முரண்பட்டுக் கொண்டார் என்பது தெரியவந்தது. அப்போது பீடாதிபதி தனது அலுவலகத்திலிருந்து வெளியே வந்தார். பேராசிரியரின் அலுவலகத்தைப் பார்த்துச் சொற்களை வீசினார். பேராசிரியர் கோபம் மேலிட தனது கைத்தடியை ஊன்றிக்கொண்டு தனது அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார். பீடாதிபதி தனது அலுவலகத்துக்குள் நுழைந்து கொண்டார். பீடாதிபதியின் அலுவலக வாசல்வரை பேராசிரியர் சென்று வார்த்தைகளால் அவரை உரத்துப் பேசிவிட்டு தனது அறைக்குத் திரும்பிவிட்டார். அப்போது பீடாதிபதி வெளியே வந்து- இவ்வாறு ஆறு தடவைக்குமேல் நிகழ்ந்தது. அடுத்து வந்த மூன்று நாட்களுக்குப் பின் பேராசிரியரும், பீடாதிபதியும் ஒரே மேசையில் எதிரெதிரே கதிரையில் அமர்ந்திருந்து மிக நெருக்கமாக உரையாடிய காட்சி என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இது இன்றைய பேராசிரியர்களுக்கும் புலமையாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் சமர்ப்பணம். இருவரும் வார்த்தைகளால் மோதும் போது கூட ஒருவரின் வார்த்தையை மற்றவர் கேட்டதையும் அவர்கள் நடந்துகொண்ட முறையையும் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. பேராசிரியர் காலத்தில் வாழ்ந்தோம், அவரிடம் கற்றோம், அவரோடு உரையாடியிருந்தோம் என்பதையெல்லாம் நினைக்கும்போது நெஞ்சு நிறைகிறது.

*அறிவுப் பசியால் பேராசிரியருடன் உறவாடிய கூட்டம். வேறுபட்ட அரசியல் கொள்கையுடையவர்களும், முரண்பட்ட சிந்தனை யுடையவர்களும் ஒன்று திரண்ட காட்சி நிறைவாக இருந்தது. அறிவுசார் புரட்சியின் அறுவடையின் எல்லையாக அன்றைய நாள் முடிந்தது. பேராசிரியரின் கனதியான நினைவுகளும் அதன் வெற்றிடமும் நிரந்தரமானது.*

5

பேராசிரியரின் இறுதி ஊர்வலம் மிகப் பிரமாண்டமானதாக காணப்பட்டது. அந்த ஊர்வலத்தில் இன, மத, மொழி, வர்க்க, சாதி வேறுபாடுகளைக் கடந்த அங்கீகாரம் பேராசிரியருக்கு உரியதாக அமைந்தது. மிக நீண்ட வரிசையான சனக்கூட்டம். அது அனைத்தும் அறிவுப் பசியால் பேராசிரியருடன் உறவாடிய கூட்டம். வேறுபட்ட அரசியல் கொள்கையுடையவர்களும், முரண்பட்ட சிந்தனை யுடையவர்களும் ஒன்று திரண்ட காட்சி நிறைவாக இருந்தது. அறிவுசார் புரட்சியின் அறுவடையின் எல்லையாக அன்றைய நாள் முடிந்தது. பேராசிரியரின் கனதியான நினைவுகளும் அதன் வெற்றிடமும் நிரந்தரமானது.

**கே. ரீ. கணேசலிங்கம்**
அரசறிவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.